**தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை - 2013**

-----------------------------------------------------------------------------------------------------------

தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 35 ஆம் இலக்க தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 15 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுநியமங்கள் (எஸ்எல்பிஎஸ்ஏஸ்) – 03

2005 ஆம் ஆண்டில் நெலிகொலவிலுள்ள கட்டிடங்களின் கூட்டிக்காட்டப்பட்ட பெறுமதியான ரூபா 7,570,800 தொகையானது உரிய பாதிப்புக்களுடன் சீராக்குவதற்கு பதிலாக மீளாய்வாணடிற்கான நடைமுறையல்லா சொத்துக்கள் மற்றும் மீள் மதிப்பீட்டு மிகை போன்றவற்றிலிருந்து கழிக்கப்பட்டிருந்தது. இதன் விளைவால் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான சொத்துக்கள் மற்றும் நிறுத்திவைக்கப்பட்ட இலாபத்தின் தேறிய பெறுமதியானது ரூபா 908,496 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் கணக்கீட்டு கொள்கைகளின் பிரகாரம், ஒன்று முதல் இரண்டு வரையான ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாகவுள்ள கடன்பட்டோரில் 30 சதவீதத்தை ஐயக்கடனுக்கான ஏற்பாடாக மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஐயக் கடனுக்கான ஏற்பாடாக 10 சதவீதம் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1998 தொடக்கம் 2001 வரையான ஆண்டுகளின் போது தேயிலை சிறுநிலவுடைமையாளரின் அபிவிருத்திக்காகவும் தேயிலை தொழிற்சாலை வலையமைப்பினை விரிவாக்குவதற்காகவும் பெறப்பட்ட ரூபா 573.4 மில்லியன் தொகையான அரசாங்க மானியங்கள் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 93.61 மில்லியன் மீதியானது மீளாய்வாண்டின் இனங்காணப்பட்டும் கணக்குகளில் பொருத்தமான சீராக்கங்களை மேற்கொள்ளாமலும் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அரசமானியமாக காட்டப்பட்டிருந்தது.

(இ) டிவி நெகும செயற்திட்டத்திலிருந்து மீளாய்வாண்டின் போது பெறப்பட்ட ரூபா 3,312,446 தொகையானது காலி பிரதேச அலுவலகத்தால் தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. இருப்பினும் இந்த கொடுக்கல் வாங்கல்கள் நிதிக்கூற்றுக்களிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மோட்டார் வாகனம் தவிர ரூபா 3,304,704 கிரயமான தற்போது பயன்படுத்தப்படுகின்ற முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்து கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று காசுப் புத்தக மீதிகளிற்கும் சம்பந்தப்பட்ட வங்கிக்கிணக்கக் கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளிற்கும் இடையில் ரூபா 99,378 மொத்தமான வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன. வித்தியாசங்களிற்கான காரணங்கள் கணக்காய்விற்காக விளக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பேரேட்டு கணக்குகளிற்கும் தொடர்புபட்ட கடன் பட்டோலைகளிற்கும் இடையில் அவதானிக்கப்பட்ட ஒவ்வொரு கடன் மீதிகள் தொடர்பில் பின்வரும் வித்தியாசங்களை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கடன் வகை | பேரேட்டு கணக்குகளின் படி மீதி | பட்டோலைகளின் படி மீதி | வித்தியாசம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இடர் கடன் | 4,183,003 | 3,575,693 | 607,310 |
| கடன் நிவாரணக் கடன்கள் | 26,392 | 4,566 | 21,826 |
| வீடமைப்புக் கடன்கள் | 21,255,746 | 20,367,326 | 618,420 |
| மோட்டார் சைக்கிள் கடன்கள் | 392,601 | 256,146 | 136,455 |
| சைக்கிள் கடன்கள் | 13,873 | - | 13,873 |
| பண்டிகை முற்பணங்கள் | 68,006 | 50,050 | 17,956 |
| விசேட முற்பணங்கள் | 112,249 | 145,350 | (33,101) |
| | 26,051,870 | 24,669,131 | 1,382,739 |

### 2.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 19,734,133 மற்றும் 1,362,417 பெறுமதியான முறையே கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் 5 ஆண்டுகளிற்கு மேலாக அதிகாரசபையால் அறவிடப்படாமலோ தீர்க்கப்படாமலோ இருந்தன.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 1,367,662 தொகையான உத்தியோகத்தர் கடன்கள் நீண்டகாலத்திற்கு மேலதிகமாக செயலற்றுக் காணப்பட்டதுடன் இது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையும் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தன.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயங்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் ஆவணச் சான்றுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்குகளின் விடயங்கள் | பெறுமதி | கிடைக்கப்பெற்றிருக்காத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மீள பட்டியலிடப்படுத்தப்பட்ட வாகனக் கடன்கள் | 7,646,315 | பட்டோலைகள் மற்றும் ஆதார ஆவணங்கள் |
| (ஆ) தேயிலை பரிசோதகர்கள்/ விரிவாக்கல் உத்தியோகத்தர்கள் என்போருக்கு வழங்கப்பட்ட மோட்டார் சைக்கிள் கடன்கள் | 10,388,988 | |
| (இ) வெள்ள நிவாரணக் கடன்கள் | 20,452 | |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ)(i) | 1975 இன் 35 ஆம் இலக்கதேயிலை சிறுநிலவுடையாளர் அபிவிருத்தி அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 14 ஆம் பிரிவு | அதிகாரசபையால் முன்னெடுக்கப்படாத (ஆ),(இ),(ஈ) இல் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அதிகார சட்டத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2003 ஆம் ஆண்டின் தேயிலை சிறுநிலவுடைமையாளர் அபிவிருத்தி அதிகார சபை திருத்திய அதிகாரச் சட்டத்தின் 2(ஆ)(ii) மற்றும் iv ஆம் பிரிவு | 13 உறுப்பினர்களை உள்ளடக்கியிருக்க வேண்டிய இயக்குனர் சபைக்கு மூன்று சபை உறுப்பினர்களை நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள்- | |
| | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்கம் | மோட்டார் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு ஒவ்வொரு 6 மாதத்திற்கும் ஒருதடவை பரிசோதிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| (i) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்கம். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம், சொத்துக்களின் பதிவேட்டில் கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருள்களின் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | 2008 யூன் 28 ஆந் திகதிய பீஈடி/50 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 07 ஆம் பிரிவு | அதிகாரசபையால் வழங்கப்பட்ட குழு போக்குவரத்து தொடர்பில் 2003 மே தொடக்கம் யூலை வரையான காலப்பகுதியின் போது அலுவலகத்திலிருந்தும் 50 கிலோமீற்றர் ஆகக்கூடிய மேல் கீழ் தூரமானது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை பின்பற்றாமல் 2,058 கிலோமீற்றரால் மிஞ்சியிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் தொழிற்பாட்டு நடவடிக்கைகளை முன்னைய ஆண்டிற்கான ரூபா 160.11 மில்லியன் நேரொத்த தேறிய பற்றாக்குறையுடன் ஒப்பிடும் போது ரூபா 207.84 மில்லியன் தேறிய பற்றாக்குறையை விளைவித்திருந்தது. ஆதலால், நிதிசார் விளைவுகளில் ரூபா 47.37 மில்லியனால் மேலுமொரு வீழ்ச்சினைக் காட்டுகின்றது. அபிவிருத்தி செலவினங்கள் ரூபா 163.75 மில்லியனால் அதிகரித்தமையே பற்றாக்குறையின் அதிகரிப்பிற்கான பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 தேயிலை உற்பத்திக்கு தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு

கணக்காய்விற்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, மீளாய்வாண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 340.22 மில்லியன் கிலோகிராம்களானதுடன் அதில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 244.33 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 71.8 சதவீதமாக இருந்தது. முன்னைய ஆண்டின் போது இலங்கையில் மொத்த தேயிலை உற்பத்தி 326.28 மில்லியன் கிலோகிராம்களானதுடன் அதில் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு 233.10 மில்லியன் கிலோகிராம்கள் அல்லது 71.4 சதவீத பங்களிப்பாக இருந்தது. அதன் பிரகாரம் தேயிலை சிறுநிலவுடமையாளர்களின் பங்களிப்பு மீளாய்வாண்டின் போது 0.4 சதவீதத்தால் மாத்திரம் அதிகரித்திருந்தது.

#### 4.1.2 தேயிலை நடுகை அபிவிருத்திகள் உதவுதொகைகள்

நிதிச் செயலாற்றல் கூற்றின்படி, ரூபா 440.06 மில்லியன் தொகையான உதவுதொகைகள் மீளாய்வாண்டின் போதான தேயிலை மீள் நடுகை, புதிய மரநடுகை, விரிவாக்கல், சமூக அபிவிருத்தி மற்றும் நிறுவன ரீதியான வலுப்படுத்தல் போன்ற அத்தகைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செலவழிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காகவும் முன்னைய நான்கு ஆண்டுகளிற்காகவும் மரநடுகை அபிவிருத்தி கிரயம் மற்றும் ஒரு ரூபாவிற்கான அபிவிருத்திக் கிரயத்தின் அமுலாக்கல் கிரயம் என்பன கிழே தரப்படுகின்றன.

| | 2013 | 2012 | 2011 | 2010 | 2009 |
|---|---|---|---|---|---|
| அபிவிருத்திக் கிரயம் ரூபா மில்லியன் | 440.0 | 276.3 | 208.0 | 189.2 | 185.7 |
| அமுலாக்கல் கிரயம் ரூபா மில்லியன் | 238.5 | 233.5 | 218.5 | 205.4 | 202.1 |
| அபிவிருத்திக் கிரயத்தின் ரூபா1 இற்கான அமுலாக்கல் கிரயம் ரூபா | 0.54 | 0.85 | 1.04 | 1.08 | 1.08 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தேயிலை மீள்நடுகை

தேசிய வேண்டுகையின் பிரகாரம், ஆகக் கூடிய விளைச்சலை பெறுவதற்கும் தேயிலை நிலங்களை நிலைத்திருக்க செய்வதற்கும் வருடாந்தம் 2,300 ஹெட்டெயர் மீள்நடுகை செய்யப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 1,165 ஹெட்டெயர்கள் மாத்திரமே மீள்நடுகை செய்யப்பட்டிருந்ததுடன் 116,492 ஹெட்டயர்கள் மொத்த முதிர்ச்சியடைந்த காணிகளில் 1.0 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தியது.

(ஆ) விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவைகள்

(i) வரைவு ஆண்டறிக்கையின் பிரகாரம், விரிவாக்கல் சேவை உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டின் போது 33,597 தனிப்பட்ட மற்றும் குழு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியிருந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 2.2 சதவீதம் குறைவாக இருந்தது.

(ii) மீளாய்வாண்டின் போது விரிவாக்கல் மற்றும் ஆலோசனை சேவைகளில் 137,661 விவசாயிகள் மாத்திரம் பங்குபற்றியிருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக பங்குபற்றியிருந்த விவசாயிகளின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 5,795 ஆல் குறைவடைந்திருந்தது.

(iii) வினைத்திறனான விரிவாக்கல் சேவையை அடைவதற்கு விவசாயிகளிற்கான ஒரு விரிவாக்கல் உத்தியோகத்தரின் நியம விகிதம் 1:1000 ஆக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் விவசாயிகளிற்கான ஒரு விரிவாக்கல் உத்தியோகத்தரின் உள்ளபடியான விகிதம் 1:2736 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் போது 26 விரிவாக்கல் உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டிருந்தும் நிலவுகின்ற விகிதத்தின் படி முறையான விரிவாக்கல் சேவையை வழங்குவதற்கு முடியாதிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

(iv) ஊவா பிராந்திய அலுவலகத்திற்கு ரூபா 53,100,732 தொகையான உதவுதொகை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 21,890,296 தொகை அல்லது 41 சதவீதம் குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தாமல் மீளாய்வாண்டின் போது வரட்சி நிவாரணத்திற்காக வழங்கப்பட்டிருந்தது.

### 4.1.3 நிறுவனரீதியான மர நாற்றுமேடைகள்

நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 07 செடி நாற்றுமேடைகளின் கீழ் 724,809 மரங்கள் நாட்டப்பட்டதுடன் 482,457 நாற்றுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 03 நாற்றுமேடைகள் ரூபா 539,937 தொகையான நட்டத்தை ஏற்படுத்தியிருந்ததுடன் திஸ்பன நாற்றுமேடையில் 2010 இலிருந்து தொடர்ச்சியாக நட்டம் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 4.1.4 தேயிலை சிறு நில உடமையாளர் அபிவிருத்தி சங்கங்கள்

வரைவு வருடாந்த அறிக்கையின்படி, 1,382 தேயிலை சிறு நில உடமையாளர் அபிவிருத்தி சங்கங்கள் பதிவுசெய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு மொத்த பதவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் 251,794 ஆக இருந்தது. மேலும், மீளாய்வாண்டின் போது ஒரு சங்கம் மாத்திரமே உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது உறுப்பினர்கள் 9,699 ஆல் அல்லது 3.8 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

**4.1.5 விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (ஐஎவ்ஏடி) மற்றும் திவிநெகும செயற்திட்டங்கள்**

ஐஎவ்ஏடி மற்றும் திவினகும செயற்திட்டத்தால் தேயிலை சிறுநிலவுடைமையாளர்கள் அபிவிருத்திக்கான உதவுதொகையாக வழங்கிய முறையே ரூபா 28,190,865 மற்றும் ரூபா 16,980,362 தொகையில் முறையே ரூபா 178,210 மற்றும் ரூபா 1,439,544 குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறை அல்லாச் சொத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள் பதவியணி உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் தேயிலை காணிகள் என்பன உள்ளடங்கலாக பின்வரும் காணி மற்றும் கட்டிடங்களின் உரிமையாண்மை 2014 திசெம்பர் 31 ஆந் திகதியான கணக்காய்வு திகதிவரை அதிகாரசபையால் கையேற்கப்பட்டிருக்கவில்லை. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **பிரதேச அலுவலகம்** | **பெறுமதி** | |
|---|---|---|
| | **காணி** | **கட்டங்கள்** |
| | **ரூபா** | **ரூபா** |
| ஊவா | 9,747,611 | 16,768,003 |
| மாத்தறை | 3,881,875 | 13,239,829 |
| இரத்தினபுரி | 5,807,250 | 16,397,833 |
| நுவரெலியா | 3,724,750 | 17,383,588 |
| | 23,161,486 | 53,789,253 |

(ஆ) 2005 இல் அதிகாரசபையின் நிதியிலிருந்து ரூபா 1,300,000 மற்றும் தேயிலை சிறுநிலவுடைமையாளர் அபிவிருத்தி சங்க நிதியத்தின் ஊவா பிரதேச அமைப்பிலிருந்து ரூபா 500,000 செலவழிக்கப்பட்டு தேயிலை சிலநிலவுடமையாளர்களின் அபிவிருத்தி சங்க நிதியத்தின் ஊவா பிரதேச அமைப்பின் பயன்பாட்டிற்காக அலுவலக மற்றும் தங்குமிடவசதிகளுடான கட்டிடம் ஊவா பிராந்திய அலுவலக கட்டிட வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இந்தக் கட்டிடம் உடன்படிக்கையெதுவும் கைச்சாத்திடாமல் சொல்லப்பட்ட அமைப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) 1992 இல் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தால் (ஐஆர்டிபீ) நன்கொடையளிக்கப்பட்ட கேகாலையிலுள்ள அதிகாரசபையின் பிரதேச அலுவலகத்தில் 1993 இலிருந்து சப்ரகமுவ மாகாணசபையின் விவசாய அமைச்சு செயற்பட்டிருந்ததுடன் இந்தகட்டிடத்தின் பெறுமதி ரூபா 800,000 ஆக இருந்தது. இந்த நிலைமையை நோக்கில் கேகால பிரதேச அலுவலகமானது போதிய தங்குமிட வசதிகள் இல்லாமல் வேறு இடத்தில் இதனுடைய அலுவலகத்தை பேணுவதற்கு இருந்தது.

(ஈ) 1990, 1993 மற்றும் 2000 இல் ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி செயற்திட்டத்தால் நன்கொடையளிக்கப்பட்ட ரூபா 2,575,000 பெறுமதியான மோட்டார் வாகனங்கள் நடைமுறையல்லாச் சொத்துக்களாக கணக்கிற்கு எடுக்கப்பட்டிருந்தது. இருந்தபோதிலும் 2015 சனவரி 31 வரை மோட்டார் வாகனங்களின் உரிமையாண்மை அதிகாரசபையின் பெயரிற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை.

## 4.3 மனிதவள முகாமைத்துவம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்கள் | மிகையான பதவிகள் |
|---|---|---|---|---|
| சிரேஷ்ட நிலை | 39 | 25 | 14 | 01 |
| இரண்டாம் நிலை | 44 | 32 | 12 | 03 |
| மூன்றாம் நிலை | 293 | 271 | 22 | 25 |
| ஆரம்ப நிலை | 46 | 44 | 02 | 09 |
| ஏனையவை (ஒப்பந்தம்/ அமைய) | - | 42 | - | - |
| மொத்தம் | 422 | 414 | 50 | 38 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 38 தேவைக்கதிகமான பதவிகள் இருந்ததுடன் இந்த பதவிகள் 2010 யூலை 29 இல் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் மேலே குறிப்பிடப்பட்ட உள்ளபடியான பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முகாமையாளர் (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம்), முகாமையாளர் (அபிவிருத்தி), முகாமையாளர் (விரிவாக்கல்), முகாமையாளர் (பயிற்சி) மற்றும் 14 விரிவாக்கல் அலுவலர்கள் உள்ளடங்கலாக 50 வெற்றிடங்கள் இருந்தன. மேலும், அதிகாரசபையினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு மேலதிகமாக அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் 20 முகாமைத்துவ உதவியாளர்கள், 18 தொழிலாளர்கள், மற்றும் 04 சாரதிகளை வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர்.

(இ) முகாமையாளர் பதவி (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம் ) 2010 ஏப்ரல் 27 இலிருந்து வெற்றிடமாக இருந்ததுடன் அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்டிருக்காத உதவி பொது முகாமையாளர் பதவிக்காக (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம்) ரூபா 1,100 மாதாந்த படியில் 2010 ஆகஸ்ட் 02 இலிருந்து செயற்படுவதற்காக உதவி முகாமையாளர் பதவியிலுள்ள (செயற்திட்டம்) உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். 2014 ஆகஸ்ட் 05 இலிருந்து அதிகாரசபையின் பொது முகாமையாளர் அவருடைய படியினை ரூபா 1,850 இற்கு அதிகரித்திருந்தார். 2014 திசெம்பர் 31 ஆன கணக்காய்வு திகதிவரை முகாமையாளர் பதவியிலிலுள்ள (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம்), வெற்றிடத்தை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.4 **பணிக்கொடை ஏற்பாட்டின் முதலீடு**

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு ரூபா 130 மில்லியன் தொகையான மொத்த பணிக்கொடை ஏற்பாட்டில் 6.9 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 8.96 மில்லியன் தொகை முதலிடப்பட்டிருந்தது. ஆகையால், அதிகாரசபை 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தில் குறிப்பிட்டதற்கிணங்க எதிர்கால கடப்பாடுகளை எதிர்கொள்வதற்கு போதிய நிதிகளை முதலீடு செய்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதும் அதிகாரசபையானது மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களை 2014 யூலை 18 இலேயே கணக்காய்விற்காக சமர்ப்பித்திருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பெறவேண்டிய மற்றும் செலுத்தப்படவேண்டியவைகள்
(ஆ) காசுக் கட்டுப்பாடு மற்றும் வங்கி கணக்கிணக்கங்கள்
(இ) உதவுதொகை கொடுப்பனவுகள்
(ஈ) கடன்கள் மற்றும் முற்பணங்களின் கொடுப்பனவுகளும் அறவீடுகளும்
(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்